# துறையூர்நகராட்சி

2023–ஆம் ஆண்டு மே மாதம் 30.05.2023 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதரணக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை:
நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>30.05.2023</td><td>01</td><td>துறையூர் நகராட்சியில் திருச்சி ரோடு காவல்நிலையம் முதல் பிரிவு ரோடு வரை உள்ள சென்டர் மீடியன் 90W LED விளக்குகள் 12 எண்ணிக்கை பொருத்துவதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.308 நாள்.30.11..2022–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 19.12.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>Sabhari Electricals,<br>Trichy.</td><td>ரூ.145550/–</td></tr>
<tr><td>2</td><td>Shri Raghavi Agency,<br>Trichy.</td><td>ரூ.147264/–</td></tr>
<tr><td>3</td><td>Balajee Electricals,<br>Trichy</td><td>ரூ.147476/–</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் உள்ள Sabhari Electricals, Trichy. அவர்கள் வழங்கிய விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக வழங்கி உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.3776/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:01 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2023</td><td>02</td><td>துறையூர் நகராட்சி முசிறி பிரிவுரோடு புறவழிச்சாலை இருபுறமும் சாலைகளில் பொதுமக்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் தினசரி பயன்படுத்தும் குப்பைகளை கொட்டுவதால் அப்பகுதிகளை பாதுகாப்பு தடுப்பு வேலி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண். 4217/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:02 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2023</td><td>03</td><td>நகராட்சிகளில் பணிபுரியும் வாகன ஓட்டுனர்களில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்தமைக்கு அரசால் வெகுமதி அளிக்க இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் திரு.செ.குணசேகரன் ஓட்டுனர் என்பவர் பெயர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ் வாகன ஓட்டுனர்களுக்கு தங்க பதக்கம் தயாரிக்க நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் மேம்பாட்டுக்கழகம், சென்னை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் சம்மந்தப்பட்ட நகராட்சிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக ந.க.எண்.1833/2022/ஜே2 நாள் 09.03.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
எனவே தங்க பதக்கம் தயார் செய்திட உரிய செலவினம் விபரம் வழங்கிட இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2650/2022/சி1 நாள் 31.03.2023–ல் கோரப்பட்டதற்கு நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் மேம்பாட்டுக்கழகம், சென்னை அலுவலகத்திலிருந்து ரூ 29,900/– என நிர்ணயம் செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. (ந.க.எண்.710/SP/22–23 நாள் 27.03.2023). இத்தொகையினை Demand Draft</td><td>தீர்மான எண்:03 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மூலமாகவோ அல்லது RTGS மூலமாகவோ அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ 29900/- வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>ந.க.எண்.2650/2022/சி1<br>(<u>அலுவலக குறிப்பு</u>). மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில்<br>மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.05.2023</td><td>04</td><td>துறையூர் நகராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பிறப்பு, இறப்பு மற்றும் சொத்துவரி பெயர் மாற்றம் படிவம் ரூ.2/-க்கும், கட்டிட விண்ணப்ப படிவம் ரூ.10/-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது காகிதம் விலையேற்றம் (கொள்முதல்) விலை உயர்வு காரணமாக பிறப்பு, இறப்பு மற்றும் சொத்துவரி பெயர்மாற்றம் படிவம் ரூ.10/-க்கும், கட்டிட விண்ணப்ப படிவம் ரூ.50/-க்கும் விலை உயர்த்தி விற்பனை செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3676/15/டி2)<br>அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:04 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2023</td><td>05</td><td>2023-24ஆம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுதுபொருட்கள் மற்றும் மென்பொருட்கள் நகராட்சிக்கு தேவைப்படுவதால் இப்பொருட்களை தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ சர்வ், தமிழ்நாடு கூட்டுறவு பல்நோக்கு சேவை கூட்டுறவு சங்கம் லிட்., IND No.13Try திருச்சிராப்பள்ளியில் வாங்கிக்கொள்ள அனுமதி கோரப்படுகிறது. இப்பொருட்களை வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) சென்னை அவர்களின் கடித எண்.C.No.29968/2012/OP3 நாள்.30.12.2013 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பொருட்கள் வாங்கிக்கொள்ளவும் அதற்குண்டான செலவினம் உத்தேசமாக ரூ.8.00 இலட்சம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3676/15/டி2)<br>அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:05 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2023</td><td>06</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுக்கான 2022-2025ம் ஆண்டு வரைக்கான உரிமம் அனுபவித்துக்கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் குத்தகை இனம் 1.பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், 2.நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், 3. அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், 4.பழையநகராட்சி அலுவலகத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருசக்கரவாகனம் நிறுத்திக்கொள்வதற்கான குத்தகை உரிமம், மற்றும் ஏலம்போகமல் உள்ள சுவாமிநாதன் தினசரி மார்கெட் கடைகள் 15,16,17,18,22,34, 42,43.44. மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5,6,7,9,10,18,23,24 மற்றும் 25 கடைகளுக்கும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 21.04.2023-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினகரன் திருச்சி பதிப்பு</td><td>04.04.2023</td><td>ரூ.30,430/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Bright Advertising , Chennai, நிறுவனம் ரூ.30,430/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது<br>ந.க.எண்.1096/2023/அ1<br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:06 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2023</td><td>07</td><td>துறையூர் நகராட்சி பவுண்டுப்பட்டியில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறை, வார்டு எண்.18 சொரத்தூர் ரோடு நுண்ணுயிர் செயலாக்க மையத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் நேரடி ஆய்வின் போது ISP கழிவறையை பராமரிப்பு செய்வது குறித்து அறிவுரை வழங்கியதை தொடர்ந்து பழுதடைந்த கழிவறையினை பழுது நீக்கம் செய்வதற்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.369 நாள்.31.03.2023ல் ஒப்புதல் வழங்கியதை</td><td>தீர்மான எண்:07 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>தொடர்ந்து 24.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.18% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.1020/2023/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.05.2023</td><td>08</td><td>துறையூர் நகராட்சியில் காவேரி குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பழைய அலுவலக வளாகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத்தொட்டிக்கு நீரளிப்பு வழங்கப்பட்டு வருவதில், தரைமட்டத்தொட்டியில் கேஸ் குளோரினேசன் மூலம் குளோரின் ஏற்றம் செய்வதற்கு Out Sourcing அடிப்படையில் 2 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.06.2023 முதல் ஒருவருட காலத்திற்கு சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.370 நாள்.31.03.2023–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.16% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.19% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.16% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.462/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:08 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2023</td><td>09</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.16, 17, 18 ஆகிய மூன்று வார்டுகளுக்கும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் காசிகுளத்திலிருந்து புதிதாக மின்மோட்டார் பொருத்தி மற்றும் பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.80 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.385 நாள்.31.03.2023–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.16% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.1017/2023/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:09 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>30.05.2023</td>
<td>10</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.16, 17, 18 ஆகிய மூன்று வார்டுகளுக்கும் குடிநீர் அல்லாத தண்ணீரினை விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் அரசினர் குடியிருப்பு சாலை முதல் சொரத்தூர் ரோடு வரை உள்ள பகுதிகளுக்கு புதிதாக பகிர்மான குழாய் அமைத்திடவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.386 நாள்.31.03.2023–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர்,<br>இலால்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர்,<br>துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.18% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண். 1017 /2023/இ1)<br><br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:10 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>11</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.11 பெரியகடை வீதியில் உள்ள தரைமட்டத் தொட்டியிலிருந்து குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு பைப்லைன் அமைக்கும் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கும் நெடுஞ்சாலைத்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் உட்பட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.246 நாள்.30.09.2022–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர்,<br>இலால்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர்,<br>துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.15% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.3051/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், இலால்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:11 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>12</td>
<td>துறையூர் நகராட்சியில் காவிரி குடிநீர் விநியோகம் நான்கு பெரிய அளவிலான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலமும் சின்டெக்ஸ் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குவதற்கு குடிநீர் பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி பகுதிகளுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகளை இயக்குவதற்கு 6 நபர்களை 01.08.2023 முதல் 31.03.2024 வரை உள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
ந.க.எண்.3381/2022/இ1<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:12 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>13</td>
<td>துறையூர் நகரப்பகுதி – துறையூர் வட்டம் – துறையூர் – கீரம்பூர் சாலையினை அணுகுசாலையாக கொண்டு (கவுன்சில் வார்டுஎண்.06–ல்) நகரளவு Ward D, Block 1 நகரளவு எண்.4/9, (S.F.No.423/8), Ward D, Block 1, நகரளவு எண்.4/8, (S.F.No.423/7), Ward D, Block 1, நகரளவு எண்.4/7, (S.F.No.423/6), Ward D, Block 1, நகரளவு எண்.11/7, (S.F.No.417/7), Ward D, Block 1, நகரளவு எண்.10/14/2, (S.F.No.10/14P), Ward D, Block 1, நகரளவு எண்.10/11, (S.F.No.421/11P, 12P), Ward D, Block 1, நகரளவு எண்.10/12, (S.F.No.421/11P,), Ward D, Block 1, நகரளவு எண்.10/13, (S.F.No.421/12P), Ward D, Block 1, நகரளவு எண்.10/17, (S.F.No.421/3), Ward D, Block 1, நகரளவு எண்.10/2, (S.F.No.421/2)ல்</td>
<td>தீர்மான எண்:13 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>மொத்த பரப்பளவு 4.79–ல் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் எண்.ம.வ./நஊ.இ.இ.(தி.மா) எண்.05/2023 என எண்ணிடப்பட்டு இணையதள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவில் அமையும் பூங்கா, உள்ளாட்சி உபயோகம், மின்சார உபயோகம், சாலைகளுக்கான இடங்கள் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு தானபத்திரம் பதிவு எண்.9989/22–ல் பதிவு செய்து ஒப்படைத்துள்ளார்கள் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.732/2023/எப்1)<br><u>அலுவலககுறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>14</td>
<td>துறையூர் நகரப்பகுதி – துறையூர் வட்டம் – துறையூர் கிராமம் சர்வே எண்.339/2, நகரளவு எண்.31, பிளாக் எண்.5 வார்டு E (கவுன்சில் வார்டு எண்.8) சாமிநாதன் நகருக்கு மேற்கு பகுதியில் 1.50 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.இ.இ (தி.மா)எண்.22/2023 என எண்ணிடப்பட்டு இணையதள வழியாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை, உள்ளாட்சி உபயோகம், மின்சார உபயோக இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு தானபத்திரம் 601/2023 எண்ணாக பதிவு செய்து நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளார். என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.528/2023/எப்1)<br><u>அலுவலககுறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:14 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>15</td>
<td>திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகத்தால் அமைக்கப்பட்ட அரசுப்பொருட்காட்சி 2023–ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக அரங்கு அமைக்கப்பட்டது. இதில் இந்நகராட்சி மூலம் அரங்கின் முகப்பில் பிளைவுட் பிரேயில் பிளக்ஸ் அடித்து உட்புறம் பிளைவுட்பிரேமில் பிளக்ஸ் அடித்து அதில் துறைசார்ந்த திட்ட விளக்கப்படங்கள் அமைக்கப்பட்டது, நடைபாதையில் கலர்மெட்விரித்து மேலே சிலிங்துணி அடித்து கொடுத்ததற்கு Nila Decorators, Madurai நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனம் ரூ.45000/– வழங்க கோரி பில்பட்டியல் சமர்ப்பித்துள்ளது. ஆகையால் பில் பட்டியல் தொகை ரூ.45000/– வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.586/2023/இ1)<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:15 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>16</td>
<td>திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகத்தால் அமைக்கப்பட்ட அரசுப்பொருட்காட்சி 2023–ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக அரங்கு அமைக்கப்பட்டது. இதில் இந்நகராட்சி மூலம் உள் அலங்காரம், வண்ண தொலைக்காட்சி பெட்டி (LED TV), Video Coverage, Editing, Voice Recording & Etc., போன்ற பணிகள் Tamil Nadu Multipurpose Indco Serve, Trichy நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனம் ரூ.34515/– வழங்க கோரி பில்பட்டியல் சமர்ப்பித்துள்ளது. ஆகையால் பில் பட்டியல் தொகை ரூ.34515/– வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.587/2023/இ1)<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:16 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>17</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட தார்சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் போக்குவரத்துக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதனால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதால் தார்சாலையினை மராமத்து பணி (Patch Work) செய்வதற்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.213 நாள்.29.08.2022ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 28.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருK.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.17% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சுரேஷ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.22% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திருK.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.17% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.2680/2022/இ1<br>அலுவலக குறிப்பு : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திருK.ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:17 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.05.2023</td>
<td>18</td>
<td>துறையூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் புதிதாக 5 எண்ணிக் கையிலான 2.0Ton குளிர்சாதனப் பெட்டி பொருத்துதல், அலுமினிய மற்றும் கண்ணாடி கதவு அமைத்தல், LED விளக்குகள் மற்றும் மின்சாதன உதிரிபாகங்கள் வாங்கி பொருத்துதல், Wireless Mic, Amplifier, Speaker வாங்கிடவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.204 நாள்.29.08.2022ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 28.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.08% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.12% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.2659/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:18 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>19</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் அமரும் இடத்தில் (Waiting Shed) மேற்கூரை சிதிலமடைந்து பெயர்ந்து விழும் நிலையில் உள்ளதால் மேற்கூரையினை மராமத்து பணி செய்திடவும் மற்றும் வர்ணம் அடித்தல் பணி செய்திடவும், குடிநீர் பணி, மின்வயரிங் மராமத்து பணி ஆகிய பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.212 நாள்.29.08.2022ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 28.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.16% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.18% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.16% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.2681/2022/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:19 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>20</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட சொத்துவரி உரிமையாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998ஐ கடந்த 2023-ம் ஆண்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 84(1)ன்படி துறையூர் நகராட்சிக்கு செலுத்தவேண்டிய சொத்துவரியினை ஏப்ரல் – 30ம் தேதிக்குள் செலுத்தி 5% தொகை (அதிகபட்சமாக ரூ. 5000/வரை) ஊக்கத்தொகை வழங்கப்படும் என்ற விபரத்தை இந்நகராட்சி பொதுமக்களுக்கு அறியும் வகையில் பேனர் வைத்தல்-(5 எண்ணிக்கை) ஆட்டோவில் விளம்பரம் செய்தல், தனியார் ஆட்டோ – 1, இந்நகராட்சி LCV வாகனம் – 4 எண்ணிக்கை பென்டிரைவில் ரெக்கார்டிங் செய்து விளம்பரம் செய்தல், மற்றும் துண்டு பிரசுரம் – 10000/- எண்ணிக்கை அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்தல் போன்ற பணிகளுக்காக உத்தேச செலவினம் ரூ.75000/- மேற்படி, செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்1082/2023/அ1)<br>
<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:20 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2023</td>
<td>21</td>
<td>துறையூர் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் திரு.ஆர்.மனோகரன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.04.2023ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத்தொகை ரூ 10000/- வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு.ஆர்.மனோகரன், துப்புரவு பணி மேற்பார்வையாளருக்கு</td>
<td>தீர்மான எண்:21 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.384/2023/சி1<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>.அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| **30.05.2023** | **22** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.0830/அ8/2022, நாள்.12.04.2022-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட் பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளை உற்பத்தி கலன்களை அகற்றுதல், காய்ச்சல் ஏற்பட்ட நபர்களை கண்டறிதல், கணக்கெடுத்தல் போன்ற பணிகளை வீடுவீடாக சென்று மேற்கொள்ள 30 களப்பணியாளர்களை நியமித்துக் கொள்ள அறிவுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் டெங்கு களப்பணியாளர்கள் 30 எண்ணிக்கையில் சுய உதவிக்குழு மூலமாக பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி நாள்.24.02.2023-ன்படி 01.03.2023 முதல் 30.04.2023 வரை இரண்டு மாதங்களுக்கு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பொதுசுகாதாரம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் வீடுகள், அரசு, அரசு சாரா அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளவும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையிலிருந்து காய்ச்சல் கண்டவர்களின் அறிக்கை பெறவும். பொதுமக்களின்<br><br>நலன்கருதி தொடர்ந்து செம்பருத்தி சுயஉதவிக்குழு மூலமாக 01.05.2023 முதல் 30.06.2023 வரை (இரண்டு மாதங்களுக்கு) பணிபுரிய மன்ற பொருள் வைக்க ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி 2019-20-ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி **ரூ.385/-** அடிப்படையில் **ரூ 7.05 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1220/2022/எச்1)**<br>**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்** | தீர்மான எண்:22 ஒத்திவைக் கப்பட்டது |
| **30.05.2023** | **23** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட பெரியார் நகர் 6-வது குறுக்கு Extension சாலை KNMT திட்டத்தில் மண்சாலைகளை தார்சாலை ஆக்கும் திட்டத்தில் பணி செய்யும் பொழுது Extension பகுதி மதிப்பீட்டில் இல்லை என்பதாலும் குடியிருப்பு பகுதி என்பதால் 80 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை அமைக்கப்பட்டது. அதற்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1421/2023/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:23 அனுமதிக் கப்பட்டது |
| **30.05.2023** | **24** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட 7-வது வார்டு Extension பகுதியில் KNMT திட்டத்தில் மண்சாலைகளை தார்சாலை ஆக்கும் திட்டத்தில் பணி செய்யும் பொழுது அதன் குறுக்கு சாலை 81 மீட்டர் நீளத்திற்கு பணி செய்யப்பட்டால் பணி முழுமை பெறும் நிலையில் அப்பணி செய்யப்பட்டுள்ளது. குறுக்கு சாலை மதிப்பீட்டில் இல்லாததால் அதற்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 1416 /2023/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:24 அனுமதிக் கப்பட்டது |
| **30.05.2023** | **25** | துறையூர் நகராட்சி வார்டு எண்.3-ல் ஏற்கனவே இருந்த குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்ட குழாய்கள் பழுதடைந்துள்ளதால் அதனை தற்போது புதிதாக மாற்றி அமைக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1692 /2023/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:25 அனுமதிக் கப்பட்டது |
| **30.05.2023** | **26** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து கழிவுநீர் கால்வாய்களிலிருந்து சின்ன ஏரியில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு Sewage Treatment Plant (STP) கழிவுநீர் சுத்திகரிகரிப்பு நிலையம் அமைக்க உரிய மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் அதனை Consultancy | தீர்மான எண்:26 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் தயார் செய்து உரிய காலத்தில் சமர்த்திட வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகையில் 2% சதவீதம் ஆலோசகர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1712/2023/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| **30.05.2023** | **27** | **திரு. த. ஜானகிராமன், 19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட 19–வது வார்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும் சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை வசதியினை ஏற்படுத்த வேண்டுமென்ற வார்டு மக்களின் கோரிக்கை படி, வார்டில் அமைந்துள்ள ஆண்டாள் அம்மன் சந்தில் சாக்கடை வசதி மற்றும் சிமெண்ட் சாலை மற்றும் வடமலை சந்தில் புதிதாக சாக்கடை மற்றம் சாலை சேதமடைந்துள்ளதால் புதிதாக சிமெண்ட் சாலை வசதியும், குட்டக்கரை மற்றும் குட்டக்கரை மேடு ஆகிய பகுதிகளில் உள்ள பழைய சாக்கடையை அகற்றிவிட்டு புதிதாக சாக்கடை வசதி ஏற்படுத்தி தந்திட வேண்டுகிறேன்.<br>வார்டு எண்.19ல் உப்பு நீர் குழாய் இணைப்பில் ஏற்கனவே அமைத்தது போக மீதமுள்ள ஆண்டாளம்மன் சந்து–1 மற்றும் குட்டக்கரை மேடு 1 மற்றும் 2 ஆகிய பகுதிகளுக்கு இணைப்பு வழங்கிட வேண்டுகிறேன். | தீர்மான எண்:27<br>அனுமதிக்கப்பட்டது |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி

**துறையூர்நகராட்சி**

2023–ஆம் ஆண்டு மே மாதம் 30.05.2023 செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை:
நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

| | | | |
|---|---|---|---|
| 30.05.2023 | **28** | துறையூர் நகராட்சி வார்டு எண்.22 குடிநீர் பகிர்மானகுழாய் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. அதில் குறிபிட்ட இடங்களில் வால்வுகள் பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்திட அதற்கான மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(**ந.க.எண்.1675/2023/இ1**)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:28 அனுமதிக் கப்பட்டது |
| 30.05.2023 | **29** | நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி ந.க.எண்.4840/2018/எச்1 நாள்.21.02.2019 6 LCV வாகனங்கள் 1 காம்பாக்டர் வாகனத்திற்கு Out Sourcing முறையில் 7 ஓட்டுநர்களை H.M.S தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலமாக நியமித்துக்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் H.M.S நிறுவனத்தின் மூலமாக பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மான எண். 342, நாள். 30.12.2022ல் 01.01.2023 முதல் 28.02.2023 வரை ஓட்டுநர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஓட்டுநர்களை நியமித்துக்கொள்வதற்கான வெளிகொணர்வு முகமைக்கான (Out Sourcing) நிர்வாக அனுமதி வரும் வரையில் பொதுமக்கள் மற்றும் பொதுசுகாதாரம் நலன்கருதி இந்நகராட்சியின் பொதுசுகாதார வாகனங்களான 6 LCV, 1 காம்பெக்டர் வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்களை நியமித்துக்கொள்ள HMS நிறுவனத்தின் மூலமாக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் கூடுதலாக ஒரு மாதத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.473.25/– என்ற வீகிதத்தில் 7 ஒட்டுனர்களுக்கு 01.04.2023 முதல் 31.05.2023 வரை (ஒரு மாதம்) பணி அமர்த்தி கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.2.03/– மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4840/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:29 அனுமதிக் கப்பட்டது |
| 30.05.2023 | **30** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.392, நாள்.31.03.2023–ல், 01.03.2023 முதல் 31.03.2023 முடிய 1 மாதத்திற்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் காயா ஆண்கள் சுயஉதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு முகமையின் மூலமாக, தூய்மைப்பணியாளர்களை நியமித்துக் கொள்வதற்கான நிர்வாக அனுமதி வரும் வரையில் இந்நகராட்சி பகுதியில் தற்போது துப்புரவு பணியில் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு தொடர்ந்து பொதுமக்கள், பொது சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், தரம் பிரிக்கப்பட்ட உலர்கழிவுகளை RCC மையத்தில் சேகரித்து வைத்து சிமெண்ட் நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல், E–WASTE மின்கழிவுகளை சேகரித்து வைத்து அபாயகரமான கழிவுகளை Incinators எரிகலன்களில் எரித்து அப்புறப்படுத்துதல், உருவாக்கிய உரங்களை சலித்து சேகரித்து வைத்தல், போன்ற பணிகளை மேற்கொள்ளவும்<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வெளிக்கொணர்வு முகமையின் மூலமாக, தூய்மைப் பணியாளர்களை நியமித்துக்கொள்வதற்கான நிர்வாக அனுமதி பெறப்படும் வரையில் சுயஉதவிக்குழு மூலம் தினக்கூலி அடிப்படையில் பொதுசுகாதாரம் மற்றும் நகராட்சி நிர்வாக நலன் கருதி 01.04.2023 முதல் 31.05.2023 வரை காயா ஆண்கள் சுயஉதவிக்குழு மூலம் 24 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee–க்கான (2019–20)–ம் ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.385/– என்ற விகிதத்தில் தினக்கூலி அடிப்படையில் ரூ.5.64 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4244.2018.எச்1) | தீர்மான எண்:30 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.05.2023 | **31** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது ந.க.எண்.28369/J3–2018 நாள்.10.12.2018–ம் தேதிய செயல்முறை ஆணையில் துறையூர் நகாட்சியில் (Out sourcing) தனியார் மயத்தின் மூலமாக 81 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியை மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. துறையூர் நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000–ன்படி வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணி அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியிடங்கள் 89 உள்ள நிலையில் தற்பொழுது 41 தூய்மை பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். தூய்மை பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததால் குப்பை சேகரித்தல் சாக்கடை சுத்தம் செய்தல் மக்கும் குப்பையிலிருந்து உரம் தயார்செய்தல் உள்ளிட்ட சுகாதாரப்பணிகள் முழுமையாக மேற்கொள்ள இயலவில்லை.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமையின் மூலமாக நியமித்துக்கொள்வதற்கான நிர்வாக அனுமதி வரும் வரையில் இந்நகராட்சிப்பகுதியில் தற்போது தூய்மை பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை அகற்றுதல், தெருக்கள் சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், காய்கறி மார்க்கெட் கழிவுகளை அகற்றுதல், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் பிரசிதி பெற்ற சிவன் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு<br><br>தினசரி அதிகமாக பொதுமக்கள் வந்து செல்லும் இடங்கள், கிராமபுற பகுதியிலிருந்து மருத்துவமனைக்கு வந்து செல்வதாலும், 18 பள்ளிகளில் வெளியூரிலிருந்து மாணவர்கள் படிப்பிற்காக வருவதாலும், பொதுமக்கள் அதிகம் கூடுவதாலும், உருவாக கூடிய குப்பைகளை பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி உடனுக்குடன் அகற்றிட வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் இந்நகராட்யின் நிதிநிலையை கவனமுடன் பரிசீலினை செய்யப்பட்டு நிர்வாக நலன் கருதியும் தூய்மை பணியாளர்கள் 32 நபர்களையும் ஏற்கனவே உள்ள சுயஉதவிக்குழு மூலமாக நியமித்துக்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.393 நாள்.31.03.2023–ல் 01.03.2023 முதல் 31.03.2023 முடிய 1 மாதத்திற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விகிதத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுயஉதவிக்குழு என்ற குழுவிற்கு அனுமதி வழுங்கப்பட்டது.<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறப்படும் வரையில் சுயஉதவிக்குழு மூலம் தினக்கூலி அடிப்படையில் பொதுசுகாதாரம் மற்றும் நகராட்சி நிர்வாகம் கருதி 01.04.2023 முதல் 31.05.2023 வரை நிலா மகளிர் சுயஉதவிக்குழு மூலம் 32 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.J3/9779/2018 நாள்.16.08.2019 செயல்முறை ஆணையில் கண்டுள்ள II Unskilled Employee–க்கான (2019–20)–ம் ஆண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் ஊதியம் ரூ.385/– அடிப்படையில் ரூ.7.52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:31 அனுமதிக் கப்பட்டது |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி